# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

12 ஆவது ஆண்டில்

விளம்பரம்

VLAMBARAM™

416-282-8059

416-282-4978

தி 12 JANUARY 15, 2002 பாலம் 02



ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அதுதான்.... (பக்கம் - 04)

"SEGWAY" விஞ்ஞானத்தில் அடுத்த கண்டுபிடிப்பு (பக்கம்- 04)

காதலன் காதலியைப் பிரிந்து இருப்பானா? (பக்கம் - 10)

2001இல் சிறந்த தமிழ்ச் சினிமா (பக்கம்-07)

தேவையானபோது மட்டும் சிரியுங்கள், அழகாக இருக்கும் (பக்கம் - 12)

தமிழனை உயரவிடுவார்களா? (பக்கம் - 06)

நான்கு வயதுச் சிறுவனின் உலக சாதனை (பக்கம் - 11)

ஏலியன்ஸ் இருப்பது உண்மையானால், அவர்கள் எங்கே?.... (பக்கம்-09)

வரிப்பத்திரம் பூர்த்தி செய்பவர்களிற்கு (பக்கம்-05)


## உன்னை அறிந்தால்

மற்றுமொரு சிறுவன் சாதனை புரிந்துள்ளான். இந்தச் சாதனையின் பெருமை அந்தச் சிறுவனிற்கு இப்பொழுது புரிந்துள்ளதோ, புரியவில்லையோ தெரியவில்லை? ஆனால் இந்தப் பெருமைக்கு உரியவர்கள் அந்தச் சிறுவனின் பெற்றோர்களே. "முயற்சி திருவினையாக்கும்". இதுவே விடாமுயற்சி பயனளிக்கும் அல்லது "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பார்களோ. ஒன்றுமட்டும் உண்மையாகவும் உறுதியாகவும் சிறப்பாகவும் கூறமுடியும். அதாவது எந்தொரு முயற்சியும் தொடர்ந்து செய்துவர நிச்சயம் வெற்றி பெற்றே தீரும். ஆயிரம் மைல் நடப்பவனும் முதல் அடி வைத்தே நடக்கத் தொடங்க வேண்டும். தஞ்சைப் பெரிய கோயிலும் ஒவ்வொரு கல்லாக வைத்தே கட்டி முடிக்கபட்டது. சிறிது சிறிதாக சரியான திட்டமிடலுடன் செய்துவரும் செயல், எந்நாளும் வெற்றிக்கு அடிகோலும். ஒரு குறிக்கோளை வைத்து அந்தக் குறிக்கோளை அடைவதற்கு பல வழிகளைக் கண்டுபிடித்து, அவற்றில் எல்லாவற்றையும் எழுதி வைத்து, அவற்றைச் செய்வதால் அந்த இலக்கை அடைய முடியும் என வாழ்வில் வெற்றி பெற்ற அறிஞர் பலர் கூறுகிறார்கள். எங்களிற்குரிய வெற்றிகளிற்கும் பொது வெற்றிகளிற்கும் சரியான தகுந்த திட்ட மிடுதல் செய்வது. இலக்கைத் தெளிவாக அறிந்து அதனைக் குறித்து வைத்து ஒவ்வொரு நாளும் அதனை உரத்து வாசிப்பதால் எமது ஆழ்நிலையிலிருக்கும் (Subconscious) மனதிற்கு தெளிவுபடுத்தலாம். இதனால் நாம் நினைத்த, திட்டமிட்ட காரியத்தை நிறைவேற்ற எமது உறநிலையிருக்கும் மனம் தன்னை ஆயத்தப்படுத்துகின்றது. இதுவே வெற்றிக்குக் காரணமாகின்றது. எனவே நல்லதையே நினைத்து அதனை நிறைவேற்றி வாழ்வில் வெற்றி பெறுவோமாக.

நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!

-நெற்றிக்கண்ணன்

## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- தான் கண்டு கொண்டிருக்கும் முடிவில்லாத கனவை மனிதன் வாழ்வு எண்ணும் கண்ணியமான பெயரிட்டு அழைக்கின்றான்.
- ஊறிப் போன பழக்கம் மனிதனுடைய இயல்பு எனப்படுகிறது. அதை உடைத்துத் தள்ள மனிதனுக்கு இயலும்.
- வேலையை நிறுத்துவதால் நமக்குத் தொல்லை ஒழிவதில்லை. வேலையை முறையாகச் செய்வதால் அது ஒழிகிறது.




RE/MAX Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க பூரண ஆலோசனை பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB

Singapore Communication

❖Limited time offer* ❖Reliable & Friendly Service

Only $30.00/M + Taxes

❖ 250 Min. (Free Day Time)
❖ Mon-Thu 7PM - 7 AM இலவசம் ❖ Fri 7PM-Mon 7AM இலவசம்
❖ C/W, W/M, C/F, +C/I இலவசம்
* 6PM-8AM (MON.-FRI) & WEEKENDS) ALSO AVAILABLE

More Info: Pl..Call: Sathi / Raj
Office:416 745-2378/416 740-5292 Hot Line 416 866-9700
5010 Steeles Ave.., W., Unit 17ABC
Kipling & Steeles - Deliver Arranged*



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life

LIBERTY MUTUAL

✆416 321-1515 / 905 294 2429 / 416 452 6975
4433 SHEPPARD AVE. E. SUIT 200, (BRIMLEY/SHEPPARD) SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com


# அறிவும் ஆக்கமும் (96)



-விஜே குலத்துங்கம்

கடந்த வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து உலகம் பூராகவும் ஒரு புதிய நவீன தொழில் நுட்ப வளர்ச்சியுடன் கூடிய ஓர் இயந்திரம் பற்றி பெரிதாகப் பேசிக் கொள்ளப்பட்டது. பலவித யூகங்கள் எதிர்பார்ப்புகள் போன்றவற்றின் மத்தியில் கடந்த வருட இறுதியில் இது பற்றிய செய்தி வெளிவிடப்பட்டது. இந்தத் தொழில்நுட்ப சாதனத்திற்கு *SEGWAY* எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பை. ஒரு ஸ்கூட்டர் (*Scooter*) போன்றதொன்று எனக் கூறலாம். ஒரு ஸ்கூட்டரின் ரயர் (*Tire*) அளவு இரண்டு சில்லுகளை இது கொண்டிருக்கும். இந்தச் சில்லுகளுக்கிடையில் ஒருவர் ஏறி நின்று தன் பாதங்களை வைக்கக் கூடிய அளவிற்கு ஒரு தட்டுக் காணப்படும். இந்தத் தட்டிலிருந்து நிலைக்குத்தாக ஒருவரின் இடுப்பளவு வரை உயரமுள்ள ஒரு தண்டு உள்ளது. இதன் உயரம் மாற்றப்படக் கூடியது. தண்டின் மேல் பகுதியில் துவிச்சக்கர வண்டியின் கைபிடி (*Handle*) போல் ஓர் அமைப்பு இருக்கும். ஒருவர் சில்லுகளுக்கிடையே ஏறி நின்று. இந்த *Handle*ஐப் பிடித்தபடி நிற்கலாம். இப்படி நின்றால் விழுந்து விடாதா என நினைக்கத் தோன்றும். இந்தச் சாதனம் செலுத்துவதற்கு இலகுவானது. ஆனால் இதில் ஏறி விழுவது கடினமானது. கற்களின் மீதோ. புற்தரை மீதோ. *Ice*இன் மீதோ சென்றாலும் விழவே மாட்டாது. துவிச்சக்கர வண்டியை செலுத்துவது போன்று நீங்கள் சமநிலையைப் பேணுவதற்காக பயிலத் தேவையில்லை.

இது எப்படி விழாமல் இருக்கின்றது என்பதை அறிவதற்கு நாங்கள் நடக்கும் போது என்ன நடக்கின்றது என்பதை பார்க்க வேண்டும். நாம் ஒரு காலை முன் வைக்கும் போது ஒரு கணம் நாம் ஒரு காலில் உடல் நிறை முழுவதையும் செலுத்தி. பின்னர் மற்றக் காலை உயர்த்தி அதற்கு முன்பாக வைக்கின்றோம். இதன்போது உட்காதுப் பகுதியிலுள்ள *Vestibular apparatus* என்னும் உறுப்பு எங்கள் உடம்பின் சமநிலையைப் பேணுகின்றது. இந்த உறுப்பு சமநிலைக்கேற்ப விடயங்களை மூளைக்கு அறிவிக்கும். மூளை அதற்கேற்ப உடம்பின் தசைநார்களை அல்லது *Muscles* களை இயக்கி கைகளை. கால்களை உடலை அதற்கேற்ப அசையைச் செய்து சமநிலையைப் பேணுகின்றது.



இதே போலத்தான் இந்த *SEGWAY* என்ற ஸ்கூட்டரிலும் *Gyroscope* என்ற கருவி உள்ளது. இது எங்கள் காதின் உட்பகுதியிலுள்ள *Vestibular apparatus* என்ற உறுப்பு செய்வது போல தொழிற்படுகின்றது. இந்த சாதனத்தின் உள்ளே மூளையின் வேலையைச் செய்ய மூன்று மின்கணணிகளும் அதனுடன் சேர்ந்த *Software* உம் உண்டு. இந்த *Software* ஆனது மைக்கிரோ சொப்ட் (*MicroSoft*) நிறுவனமே ஆச்சரியப்படும் அளவிற்கு மிகவும் திறமை வாய்ந்தது எனக் கூறப்படுகின்றது. இந்த சாதனத்தின் உள்ளே இருக்கும் *Gyroscope* சமநிலை பற்றிய தகவலை, மின்கணணிக்கு அனுப்ப. மின்கணணியானது சமநிலைக்கேற்ற கட்டளைகளை இக் கருவியினுள் இருக்கும் பல மோட்டார்களுக்கு அனுப்புகின்றது. எங்கள் கால்கள் செய்யும் வேலையை இந்தக் கருவியின் இரண்டு சில்லுகளும் செய்து இதை அசையச் செய்கின்றது. இந்த சாதனத்தின் உள்ளே ஒரு விமானத்தின் உள்ளே இருக்கும் *Gyroscope* இன் தரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த *SEGWAY* எனப்படும் போக்குவரத்து சாதனத்திற்கு எரிபொருள் தேவையில்லை. சார்ஜ் பண்ணக் கூடிய பற்றரிகள் மூலமே இது இயங்குகின்றது. நேராக நிற்கும் இந்த சாதனத்தில் ஒருவர் ஏறி நின்று, தன் உடலை சிறிது முன்னோக்கி அசைத்தால் போதும் இந்தச் சாதனம் முன்னோக்கி அசையும் திரும்பவும் உடலை பின்னோக்கி சரித்து உடலை நேராக்கினால் வண்டி நின்றுவிடும். உடலை பின்னோக்கி அசைத்தால், வண்டி பின்னோக்கி அசையும். எனவே சாதாரண வாகனங்கள் போல் *accelerator*, பிறேக் போன்றவை கிடையாது. உங்களின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு வண்டி அசைகின்றது. நீங்கள் *Handle*ஐ பிடித்திருக்கும் போது இடது கை விரல்களினால் சற்று *Handle* ஐ முறுக்கினால் இடது பக்கம் வண்டி திரும்பும். அதே போல் வலது கைவிரல்களினால் *Handle*ஐ முறுக்கினால் வலது பக்கம் வண்டி திரும்பும். இந்த வண்டி ஓடக்கூடிய அதிகூடிய வேகம் மணித்தியாலத்திற்கு 17 மைல்கள் அல்லது 27 கிலோமீற்றர் ஆகும். ஒரு தடவை பற்றரியை சார்ஜ் பண்ணினால் 27 கிலோ மீற்றர் தூரம் ஓடக் கூடியது. ஒரு தடவை சார்ஜ் பண்ணுவதற்கு 5 சதத்திற்கு குறைவான பணமே செலவாகும்.

இந்த வாகனம் யாருக்கு உதவியாக இருக்கும் எனப் பார்த்தால் வீ[illegible]க தபால் விநியோகிக்கும் தபால்காரர்களுக்கு. பத்திரிகை விநியோ[illegible]ம் செய்பவர்களுக்கு இது மிகவும் உதவும். பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இடங்களைச் சுற்றிச் சுற்றி நடந்து சுற்றாடலை அவதானித்து வருவார்கள். இவர்கள் இந்த *Segway* வாகனத்தில் மிகக் குறைந்த செலவில் சுற்றி வரலாம். பூங்காவனம் (*Park*) போன்ற இடங்களிலும் சுற்றித் திரியும் உத்தயோகத்தர்கள் இதில் சுற்றி வரலாம்.

துவிச்சக்கிர வண்டிகளில் வீதிகளில் சவாரி செய்வோர், றக் (*Truck*) வண்டிகளுடனும் கார்களுடனும் ஓடுவது கடினமாக இருக்கும். விபத்து நடக்கவும் வாய்ப்புகள் உண்டு. ஆனால் பக்கப் பாதைகளில் நடந்து செல்லும் மனிதர்களுடன் இந்த வண்டியில் செல்லலாம். நடப்பவர் ஒருவர் எடுக்கும் இடத்தைத் தான் இந்த வண்டியும் எடுக்கும். மோதினாலும் மனிதர் மனிதருடன் தான் மோதுவார்கள். எதிர்காலத்தில் பெரிய நகரப் புறங்களில் இது பரந்தளவில் பாவிக்கப்படும் என நம்பப்படுகின்றது. பெரிய நகரப் பகுதிகளில் வாகனத் தரிப்பிடங்கள் குறைவு. இருந்தாலும் கட்டணம் அதிகம். இந்த *Segway* வண்டியை கார்களின் பின்புற டிறங்கினுள் வைத்துக் கொண்டு போய். நகருக்கு சற்று தூரத்தில் வாகனத்தை நிறுத்தி. பின்னர் இந்த *Segway* வண்டியில் ஏறி நகரப் பகுதிகளிலுள்ள வேலையிடங்களுக்குச் செல்லலாம்.

இந்தச் சாதனத்தைத் தயாரிக்க மான்செஸ்ரரில் உள்ள நியூஹம்செயரில் 7.200 சதுர மீற்றர் பரப்பளவில் ஒரு தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த வருட இறுதியில் மாதம் ஒன்றிற்கு 40.000 வண்டிகளை இந்[illegible]வனம் தயாரிக்கும். ஆரம்பத்தில் தொழிற்சாலைகளின் ஓடர்களுக[illegible]ன் வண்டிகளை செய்ய இருக்கின்றார்கள். தொழிற்சாலைகளிலும் பெரிய வா[illegible]க நிறுவனங்களிலும் வேலையாட்கள் அசைந்து திரிய இது உதவும். தொழிற்சாலைக்கான வண்டிகள் ஒவ்வொன்றும் 8000 அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட விருக்கின்றது. வருட இறுதியில் பொது மக்களின் பாவனைக்கான 3000 அமெரிக்க டொலர் விலையுள்ள வண்டிகள் தயாரிக்கப்பட விருக்கின்றன. ஏற்கனவே அமெரிக்கத் தபால் திணைக்களம். ஜெனரல் எலக்ரிக் கொம்பனி. அமேசோன் நிறுவனம், தேசிய பூங்காவன வசதிகள் நிறுவனம் ஆகியவை இவற்றிக்கான ஓடர்களைக் கொடுத்துவிட்டன.

இது வரை காலத்தில் வெளிவந்த பொருட்களில், மிக விரைவில் 1 பில்லியன் விற்பனையை எட்டிப் பிடிக்கக் கூடிய சாதனம் இதுவாக அமையும் எனக் கூறப்படுகின்றது. மக்களின் பாவனையில் எவ்வளவு தூரம் இது வெற்றியளிக்கப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

******************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது wijeyaku@hotmail.com என்ற முகவரிக்கு e-mail ஐ எழுதி அனுப்பவும்.




நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?
கவலையை விடுங்கள்
கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற
Vitaplex
சம்போ அன்ட் கன்டிஷனர்
உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.
Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable Taxes Extra
கிடைக்கும் இடங்கள்
ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்சிஸ்சாகா, எதோபிக்கோ மற்றும் மொன்றியலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

OODAM MAINTENANCE WORKS
Janitorial Services ("Sanitation for the Nation")


* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING
>Railing > Fencing >Welding
Free Estimates
Pl. Call: Thamby - TEL./Fax: (416) 638-2796
18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing





- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON




Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


## ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையில்....



### நிறைகுடம் தழும்பாது

அண்மையில் அலையோசை வானொலிக்காக வைத்திய கலாநிதி திரு. பொன் சத்தியநாதன் அவர்களை நேர்காண ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இவர் தமிழீழத்தின் பருத்தித்துறை நகரில் பிறந்து, ஹாட்லி கல்லூரியில் கல்வி பயின்று வைத்திய கலாநிதி பட்டத்தை இலங்கையில் பல்கலை கழகத்தில் பெற்றவர். இப்போது அவுஸ்திரேலியா நாட்டின் மெல்போர்ன் நகரில் வைத்தியத் துறையில் சேவை செய்து வருகின்றார். இவர் எல்லா வைத்திய கலாநிதிகளைப் போன்று தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளாமல், தனது தாய்மொழி தமிழின் மேல் கொண்ட அளவு கடந்த காதலினால், தமிழகம் முதலாக இன்று உலகின் பல பாகங்களிலும் பேசப்படும் தமிழ் பல காரணங்களினால் சிதைவடைந்து எ[illegible]தைக் கண்டு பொறுக்க முடியாமல் தமிழ் மொழியின் சீர்திருத்தத்திற்கும் மற்றைய மொழிகளின் பாதிப்பில் இருந்து தமிழ் மொழியை மீட்டெடுக்கவும் உறுதி கொண்டு தனது வாழ்க்கையை அதற்காக அர்பணித்து இருக்கின்றார்.

இது வரை தமிழ் மொழி சம்பந்தமாக அவரது பெயரைக் கேள்விப்படாத போதும் அவரை நேர்கண்ட போது தான் ஆச்சரியப்படத்தக்க பல விடயங்களை அவரிடம் இருந்து அறியக் கூடியதாக இருந்தது. தமிழ் மொழி பற்றி நல்ல பல ஆராச்சிகள் செய்து கிடைக்கப் பெற்ற நல்ல தகவல்களை தமிழ் நாட்டின் கலைஞர் மு. கருணாநிதி முதலாக உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்து வரும் தமிழ் அறிஞர்களுக்கு தெரியப்படுத்தி, தமிழ் மொழியின் தனித்துவத்தை ஆங்கில மொழிக்கு ஈடாக இந்த மண்ணில் நிலை நிறுத்துவதற்கு முழு மூச்சாக இன்று முயன்று வருகின்றார்.

தமிழ் நாட்டின் தமிழ் அறிஞர்கள் முதலாக, உலகின் பல பாகங்களில் வாழும் தமிழ் அறிஞர்கள் வரை எதிர்பார்க்கும் விடயம் என்னவெனில் தமிழீழம் என்ற நாட்டின் விடிவைத்தான் என்று மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். ஏனெனில் தமிழீழம் ஒன்று தான் தமிழ்மொழி இந்த உலகின் நிலையாக வேரூன்றவும் சீராக வாழவும் வழி வகுக்கும் என்று அவர்கள் திடமாக நம்புவதாகவும் தமிழீழத்தில் வரும் வளர்ச்சியைக் கண்டு தான் தமிழ் நாடே தனது தமிழ்ச் சீர்த்திருத்தத்தைத் தொடரும் என்று கூறினார்.

தமிழீழ, தமிழக அரசாங்கங்கள் தமிழ்மொழி சீர்த்திருத்தப் பணியில் இ[illegible]க வேண்டிய அதே நேரத்தில் உலகின் பல பாகங்களிலும் வாழும் த[illegible]ப் பெற்றோர்கள் தமது தாய்மொழியாம் தமிழை அந்த அந்த நாடுகளில் தமது வீடுகளில் பிள்ளைகளுடன் கட்டாயமாகப் பேசி பழக்கினால் மாத்திரமே எதிர்கால சந்ததியினர் தமிழ் பேசவும் தமிழ் மொழி வளரவும் வழி வகுக்கும் என்று தான் திடமாக நம்புவதாகவும் கூறினார். வானொலி நேர்காணலில் கலந்து கொண்ட தந்தை ஒருவர் எவ்வளவு தான் முயன்றாலும் தமிழ் எழுத்துக்களைப் பயிலுவதற்கு வெளிநாடுகளில் வாழும் தமிழ்ப் பிள்ளைகள் படும் கஸ்டங்களின் காரணமாக, மற்ற மொழிகளைப் போன்று ஏன் நாமும் ஆங்கில எழுத்துக்களை உபயோகிக்கக் கூடாது என்ற கேள்விக்கு பதில் அளிக்கையில், ஏற்கனவே தமிழ் சொற்களை, பெயர்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதும் பொழுது வரும் உச்சரிப்பு, கருத்து முரண்பாடுகளை எடுத்துக் கூறி அத்தகைய ஆங்கில எழுத்துப் பாவனைகளினால் சாத்தியம் இல்லை என்று பல ஆதாரங்களை பதிலாகக் கொடுத்தார். தமிழ் மொழியின் தனித்துவம் காக்கப்பட வேண்டுமாயின் மாற்றுவழி இருக்கக் கூடாது என்பதிலும் மிக உறுதியாக இருந்தார்.

தமிழுக்குச் சேவை என்ற பெயரில் பொது ஊடகங்களை உருவாக்கி பணம் பண்ண பலர் முயற்சி செய்யும் தமிழக மற்றும் அனைத்துலக தமிழர்கள் மத்தியில் சத்தமில்லாத ஒரு தவமாக இதை செய்யும் திரு. சத்தியநாதன் நிச்சயமாக ஒரு நிறைகுடம் தான்.

வைத்திய கலாநிதி திரு. பொன். சத்தியநாதனின் மனத்தில் இப்போது இருக்கும் விருப்பங்கள்: பெரும் மதிப்பும் அன்பும் வைத்திருக்கும் தமிமீழத் தலைவர் பிரபாகரனின் முயற்சிகளுக்கு வெற்றி. கனேடிய தமிழ் மக்களின் மொழி ஆர்வமும் ஈடுபாடும் காரணமாகக் கூடிய விரைவில் மீண்டும் கனடாவிற்கு வருவது. தான் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் பற்றிய ஆதாரங்களுடன் வந்து பெரிய அளவில் தமது முயற்சிக்கு ஆதரவு தேடுவது. வைத்தியத் துறையில் இருந்து சில காலம் ஓய்வு பெற்று தமிழ் ஆராய்ச்சிக்குத் தனது முழு நேரத்தையும் செலவு செய்வது போன்றவையாகும்.

உண்மைத் தமிழ்ச் சேவை செய்யும் தமிழனின் விருப்பங்கள் நிறைவேற இறைவனை வேண்டி தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடும் இவ் வேளையில் எல்லோருக்கும் உளம்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். சிந்தனை தொடரும்....

பரம். G.
ஒரு சாதாரண மனிதன்


SHIKA SERENDIB MARKET

நாளாந்த பாவனைக்குத் தேவையான சகல பொருட்களையும் மலிவு விலைகளில் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



SHIKA SERENDIB MARKET

TEL: (416) 261 - 2230
FAX: (416) 261 - 7835
2631 - 33 Eglinton Ave., East
Scarborough, Ont. M1K 2S2




பெருமை பாராட்டிக்கொள்ளாத பணக்காரனாக இருப்பதை விட முணுமுணுத்து முறையிட்டுக் கொள்ளாத ஏழையாக இருப்பது கடினம்

-சீனப் பழமொழி

# ஆரோக்கிய வாழ்வு (71)



- *N.* செல்வசோதி

**ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அதுதான் ஆரோக்கிய வாழ்வு**

நமது உடலில் உஷ்ணம் அதிகரித்தால் வாத உடம்பு கொண்டவர்களுக்கு நரம்புத் தளர்ச்சி. சோர்வு. புண்கள். வீக்கம். மலச்சிக்கல் போன்ற நோய்க் குறிகள் வெளியே தென்படும்.

பித்தம் உடம்பு கொண்டவர்களுக்கு பசியின்மை. மூலக்கடுப்பு. இருமல் குளிர்ச்சுரம். காமாளை போன்ற நோய்கள் தோன்றும். கபாலம் உடம்பு கொண்டவர்களுக்கு வியர்வை சுவாச அடைப்பு. மயக்கம் என்பன தோன்றும்.

பொதுவாக நமது உடலில் உஷ்ண வேறுபாட்டால் சரீரத்தின் தன்மைக்கு ஏற்றவாறு நோயின் அறிகுறிகள் தோன்றும். அதுமட்டுமன்றி உடலுக்கு ஒவ்வாத செயல்களினால் மாறும் உடலின் இயல்பான உணர்வுகளையும் வேகங்களையும் அடக்குவதாலும் இரச தாதுக்களின் கழிவுகளைச் சரிவர வெளியேறாது தடுக்கின்றன.

மனிதனின் உடல் வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் இயற்கையின் நியதிகள் இயற்கை உணவுகள் பெரிதும் உதவுகின்றன. காலத்திற்கும் பருவத்திற்கும் ஏற்ற பயனுள்ள உணவுகள் வேண்டும். அதைத்தான் நாம் கைக்கொள்ள வேண்டும். மனிதன் இதை தமது வாழ்வியல் நெறியாகப் பின்பற்றினால் அவன் நீண்ட ஆயுளையும் ஆரோக்கிய வாழ்வியலையும் பெற்றுவிடலாம். அவனது அறிவும் வளர்ச்சியடையும்.

உடலுக்கு ஏற்ற இயற்கை உணவுகளை ஒருவன் உண்டு வந்தால் அவனிடம் இளமைப் பொலிவும் புத்தித் தெளிவும் கூரிய கண் பார்வையும் பெறலாம். அதுமட்டுமன்றி ஊளைச் சதையும் குறையும்.

நாம் உண்ணும் உணவில் நமக்குத் தேவையான எல்லாவிதமான சத்துக்களும் உள்ளதா? அதில் ஏதாவது சத்துக்கள் குறைந்து இருந்தாலோ அல்லது கூடி இருந்தாலோ நோய்கள் ஏற்படும். அதனால் உடலுக்கு ஏற்ற உணவுகளைக் கண்டறிந்து உண்ண வேண்டும். உணவுகளை நன்கு மென்று உமிழ்நீருடன் கலந்து விழுங்க வேண்டும். சுலபமாகச் சீரணிக்கும். உணவுகளைத் தெரிவு செய்வது தான் நல்லது. ஒருவேளை உணவுக்குப்பின் இடைவெளிவிட்டு அது சமிபாடடைந்த பின்தான் மறு வேளை உண்ண வேண்டும்.

ஆளும் வளரனும் அறிவும் வளரனும் அதுதான் ஆரோக்கிய வாழ்வு. மனிதர் தமது வாழ்வியல் நெறியுடன் நம்பிக்கையுடன் இருந்தால் அவரிடம் ஆரோக்கியம் தானாகவே வந்து சேரும். அவரைத் தேடி எல்லா வளமும் வரும். உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவுகளையும் உடற்பயிற்சிகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும். உடலுக்கு ஒவ்வாத உணவுகளை விரும்பத்தினாலோ அல்லது மற்றவர்களின் வற்புறுத்தலுக்காகவோ உண்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.



படித்தால் அறிவாளி ஆகலாம். ஆனால் அவன் புத்திசாலியாக இருக்க வேண்டும். ஏதோ உயிர் வாழ்ந்தால் போதுமா? ஆரோக்கியம் நிறைந்து இருக்க வேண்டாமா? இயற்கை உணவுகள் தூய்மையான இரத்தத்தை உருவாக்கி மூளை விருத்தியையும் வலுவான இதயத்தையும் உருக்கிவாக்குகிறது.

உடலிலுள்ள அழுக்குகளையும் கழிவுப்பொருள்களையும் முறையாக அகற்றி அதனைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். அத்துடன் தினமும் சிறிது நேரமாவது தியானப் பயிற்சி (*Meditation*) செய்து உள்ளத்தையும் தூய்மையாகவும் தெளிவாகவும் வைத்திருக்க முயற்சி செய்ய வேண்டும். இது தான் சிறந்த வாழ்வியல் நெறியாகும்.

*   *   *   *   *


நியூ மிலேனியத்தில்
ஸ்காபரோவில் 11வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**

**NTE AUTO INC.**
**New Trade Engineering**

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**
சிவபாலன்

CONTACT: SIVABALAN
☎: (416) 750 - 1573
151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



IN NEW MILLENNIUM WE ARE ENTERING 10TH YEAR SERVICE IN SCARBORUGH

**கலைமகள் புத்தக நிலையம்**

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- *CREDIT LEVEL* தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

2001 இன்று
இன்ரநெற்றில்
கலகலப்பு

1972 அன்று இணுவிலில்
கலகலப்பு

விஷு வருடத்தில்
குஷியான செய்தி

கலகலவென்று சிரித்து மகிழ கலகலப்பு தீசனின்

இன்னும் பார்க்கவில்லையா? kalakalappu.net

# கனடிய பொருளாதாரம்



## கணக்கியல் பொருளியல்

### *2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப் பத்திரங்களைப் பூர்த்தி செய்தல்*

*கடந்த இதழில் இருந்து உங்கள் வேலைச் சம்பளத்தில் இருந்து எவ்வகையான கழிவுகளை கழிக்கலாம் என்று ஆராய்ந்து வருகின்றோம். இதன் தொடர்ச்சியாக மேலதிகமாக உங்கள் மொத்த வருமானத்தில் இருந்து வேறு என்ன தொகைகளைக் கழிக்கலாம் என்று இவ் இதழில் ஆராய்வோம்.*

1. *ஓய்வூதியக் காப்புறுதித் திட்டத்திற்கு (Retirement Saving Plan) நீங்கள் செலுத்திய பணத்தை உங்கள் மொத்த வருமானத்தில் இருந்து கழிக்கலாம். (RRSP)*

2. *குழந்தைகளைப் பராமரிப்பதற்காக நீங்கள் ஒரு குழந்தை பராமரிப்பு நிலையத்திற்கோ அன்றி தனி நபருக்கோ செலுத்திய பணத்தை உங்கள் வருமனாத்தில் இருந்து கழிக்கலாம்.*

3. *2001ஆம் ஆண்டில், ஒரு வதிவிடத்தில் இருந்து மற்றொரு வதிவிடத்திற்கு உங்களது வேலை சம்பந்தமாக இடம் மாறியிருந்தால், ஆகக் குறைந்தது 40 கிலோ மீற்றர் (Kilometer) ஆவது புதிய வேலை இடம் இருக்கவேண்டும். அவ்வாறு இடம் மாறுவதற்கான செலவு செய்த தொகையை (Moving Payments) உங்கள் சம்பளத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும். இதற்குச் சில நிபந்தனைகள் உள்ளன.*

4. *பொதுவாகக் கடன்களுக்காக செலுத்திய வட்டியை (Interest) உங்கள் சம்பளத்தில் இருந்து கழிக்கலாம். இப்படியாவது செலுத்திய வட்டியை உங்கள் வருமானத்தில் இருந்து கழிப்பதற்கு சில நிபந்தனைகள் உள்ளன.*

5. *உங்களுக்கு நியாயமாகக் கிடைக்கக் கூடிய சம்பளத்திற்கோ அல்லது உங்களது ஓய்வூதியப் பணத்தையோ முதலாளியிடம் இருந்து பெறுவதற்காக நீங்கள் ஒரு வழக்கறிஞரை (Lawyer) நியமித்து அவருக்குச் செலுத்திய பணத்தையும் உங்கள் வருமானத்தில் இருந்து கழிக்கலாம்.*

6. *மேற்குறிப்பிட்ட வியங்கள் தவிர இதற்கு மேலும் பல கழிவுகளை உங்கள் 2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப்பத்திரத்தில் இருந்து கழிக்கக் கூடியதாக இருக்கும். குறிப்பாக ஒவ்வொருவரும் ($7,412) ஏழாயிரத்து நானூற்றி பன்னிரண்டு டொலர்களை உங்கள் 2001ஆம் ஆண்டிற்கான வருமானத்தில் இருந்து கழிக்கலாம்.*

*மீண்டும் அடுத்த இதழில், மேலதிகமாக நீங்கள் உங்கள் 2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப்பத்திரத்தில் இருந்து கழிக்கக் கூடிய கழிவுகளைப் பற்றி ஆராய்வோம்.*

*மேற்குறிப்பிட்ட விடயங்களில் உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நீங்கள் எங்களுக்கு தெரியப்படுத்தி அதற்கான பதில்களை நாங்கள் தரக்கூடியதாக இருக்கும்.*

*மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.*


**Mark Markandu, CGA**
**Certified General Accountant**
**416 290 0946 / 416 834 6660**
**e-mail: mark.markandu.cga@on.aibn.com**

* * * * * *

* உலகில் உள்ள நகரங்களில் மிகவும் அசுத்தமான வாயு மண்டலம் உள்ள நகரம் டோக்கியோ நகரம் தான்.

* ஆரம்ப காலத்தில் மெழுகுவர்த்தியை கொழுப்பில் இருந்தே தயாரித்தனர். மெழுகுவர்த்தி தயாரிக்கும் முறை கி.மு. முதல் நூற்றாண்டிலேயே கண்டு பிடிக்கப்பட்டது.

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA
PRINTERS




உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும் முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்.

2002ஆம் ஆண்டிற்கான கலண்டர் வெளிவந்து விட்டது.

80 BARBADOS BLVD., UNIT #4
SCARBOROUGH, ONT.
☎: (416) 410-6401

YARL WINDOW COVERING
1530 WARDEN AVENUE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.



CUSTOM MADE....
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES

இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377

FREE ESTIMATE

# விளையாட்டுத் தகவல்கள் (91)



-எஸ். கணேஷ்

## தமிழனை ஒருபோதும் உயர விடப்போவதில்லை!!!

கிரிகெட் சரித்திரத்தில் இது ஒரு துக்ககரமான நிகழ்வு ஆகும். தமிழ் விளையாட்டு வீரன் முத்தையா முரளிதரனை வைத்து பிழைப்பு நடாத்தும் ஸ்ரீலங்கா அணி. முரளிதரனால் முறியடிக்கப்பட இருந்த உலக சாதனையை ஒரு ஸ்ரீலங்கன் ஒருவரினாலும் இந்தியன் ஒருவராலும் நழுவவிடப்பட்டுள்ளது. இப்போது சிம்பாவே அணியுடன் விளையாடும் ஸ்ரீலங்கா அணி ஒருநாள் ஆட்டங்களில் White Wash செய்துள்ளது. அடுத்து முதல் டெ்ஸ்ட் ஆட்டத்தில் இனிங்சால் வெற்றியீட்டியது. 2001ஆம் ஆண்டு பல சாதனைகளை நிகழ்த்திய ஸ்ரீலங்கா அணி 2002ஆம் ஆண்டிலும் இரண்டாவது டெஸ்ட் இலும் இனிங்சால் வெற்றி பெற்று வெற்றியுடன் புதுவருடத்தில் கால்பதித்துள்ளது.

ஜனவரி 4ஆம் திகதி ஸ்ரீலங்கா அணி இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் முதலில் சிம்பாவே அணியை ஆடப் பணித்தது. இரண்டாவது டெஸ்ட்டின் முதல் நாளிலேயே சிம்பாவேயின் விக்கெட்டுகளை முரளிதரன் படபடவென சரிக்கத் தொடங்கினார். முதல் நாள் ஆட்ட இறுதியில் முரளிதரன் 51 ஓட்டங்களைக் கொடுத்து 9 விக்கெட்டுகளைச் சரித்து விட்டார். எஞ்சி இருப்பது ஒரு விக்கெட் மாத்திரமே. 1956ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த Jim Laker இனால் 53 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்டுகளை எடுத்து அதாவது ஒரு இனிங்சில் சகல விக்கெட்டுகளையும் எடுத்து உலக சாதனையை ஏற்படுத்தியிருந்தார். இந்தியாவைச் சேர்ந்த அனில் கும்பிளே ஒரு தடவை 10 விக்கெட்டுகளை எடுத்திருந்தார். ஆனால் அவர் கொடுத்த ஓட்டங்கள் 74 சகல உலகசாதனை இன்னும் முறியடிக்கபப்படாமலேயே இருக்கின்றது.

இந்த உலக சாதனையை முறியடிக்க இன்று உலகில் பந்து வீச்சில் முதலாம் இடத்தில் இருக்கும் தமிழ்வீரன் முரளிதரன் 2002ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி முறியடிக்க ஒரு பெரும் வாய்ப்புக் காத்திருந்தது. 4ஆம் திகதி இறுதியில் 9 விக்கெட்டுகளை எடுத்துக் கொண்டிருந்த முரளிதரன் கடைசி ஓவரில் வீசிய கடைசிப் பந்தை சிம்பாவே துடுப்பாட்ட வீரர் Olanga அடித்த போது முரளிதரன் Catch பிடிக்கப் பாய்ந்தார். இவர் பாய்ந்ததோ அண்ணளவாக தான் பந்து வீசிய இடத்தில் இருந்து 6 அடி தூரம் ஆனாலும் துரதிஷ்டவசமாகப் பந்து முரளிதரனின் சுட்டு விரலைப் பதம் பார்த்து விட்டது. கடைசிப் பந்தில் தனது சுட்டு விரலை Dislocate பண்ணிக் கொண்டார்.

ஆனாலும் உலக சாதனையை எப்படியாகவும் முறியடித்து விட வேண்டும் என்ற ஆவலில் தனது முறிந்த விரலில் கட்டுப் போட்டபடி அடுத்த நாள் காலையில் களம் இறங்குகின்றார். பந்து வீசும் முனையில் ஒருவராக இந்தியரான வெங்கட்ராகவன் கடமையாற்றுகின்றார். முதல்பந்து முதளிதரன் வீசுகின்றார். முதல் பந்திலேயே கச் கொடுக்கப்படுகின்றது. இதை அத்தப்பத்து கோட்டை விட்டுவிடுகின்றார். மூன்றாவது பந்து LBW கேட்கப்படுகின்றது. துடுப்பாட்ட வீரரான Olngaவைதான் அவுட் என்று நினைத்த போது நடுவராகக் கடமையாற்றும் வெங்கட்ராகவன் மறத்து விடுகின்றார். முத்தையா முரளிதன் சளைக்காமல் மீண்டும் பந்து வீசுகின்றார். முதல் ஓவரை மேடின் ஓவராகவே போட்டு முடிக்கின்றார். அடுத்த ஓவரை பந்த வீச சமிந்தா வாஸ் வருகின்றார் அவர் வீசிய பந்து துடுப்பாட்டக் காரரின் மட்டையில் பிடிக்காமல் PAD இல் பட்டு விக்கெட் கீப்பரிடம் சென்றடைகின்றது. அணித் தலைவர் ஜெயசூரியவோ அல்லது பந்து வீசிய வாஸ் கூட அப்பீல் பண்ணவில்லை. ஆனால் நடுவராக அடுத்த முனையில் கடைமையாற்றிய; அசோக்கா டிசில்வா அவசரப்பட்டு உடனேயே அவுட் கொடுத்துவிடுகின்றார். ஸ்ரீலங்கா அணி வீரர்கள் கூட முரளிதரன் இந்த உலக சாதனையை முறியடிக்க வேண்டும் என விரும்பிய நிலையில் ஒரு தமிழன் உலக சாதனையை ஏற்படுத்தக் கூடாது என்ற நினைவில் ஒரு இந்திய நடுவரான வெங்கெட்டும் ஸ்ரீலங்கா அணியின். அசோக்கா டிசில்வாவும் இணைந்து முரளிதரன் நிகழ்த்த இருந்த உலக சாதனையை நிராசையாக்கி விட்டார்கள். ஸ்ரீலங்காவினரான டிசில்வா தன்னுடைய நாட்டைச் சேர்ந்தவர் உலக சாதனையை ஏற்படுத்தப் போகின்றார் என்று பெருமை கொள்ளாமல் ஒரு தமிழனை உலக சாதனைப் பட்டியலில் இடம் பெற விடப்படாது என்று அவசரப்பட்டு அவுட் என்று கொடுத்து விட்டார். முரளிதரன் 51 ஓட்டங்களைக் கொடுத்து 9 விக்கெட்டுகளையும் வாஸ் ஒரு விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நிலையில் சிம்பாவேியின் ஆட்டம் முடிவுற்றது. இரண்டாவது இனிங்சில் முரளிதரன் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்ற மொத்தம் 13 விக்கெட்டுகளைக் கைப்பற்றி ஸ்ரீலங்கா அணி


## Unpaid Bills
### Keeping You Awake At Night?



Government approved programs can help you-bankruptcy not necessary.

* *Obtain debt relief.*
* *Protect your income and house, car and other assets.*
* *Stop nasty calls from collection agencies.*
* *Stop legal action by creditors.*

Get Peace Of Mind With Qualified Credit Counseling

Don't Delay. Call Now.

WEST: ☎ - 905-848-0006 Mississauga Office

EAST: ☎ - 416 335-3345 Scarborough Office



### யோகா சோதிடம்



★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
★ சுபமுகூர்த்தம் கணித்தல்
★ சாதகக்குறிப்புக் கணித்தல்
★ பலன் பார்த்தல்

☎: (416) 299-8361


கைப்பற்ற மொத்தம் 13 விக்கெட்டுகளைக் கைப்பற்றி ஸ்ரீலங்கா அணி சிம்பாவே அணியை மீண்டும் இனிங்சால் வெற்றி கொண்டது. இதில் Man Of The Match விருது முரளிதனுக்கே வழங்கப்பட்டது. நடுவர்களின் தீர்ப்பிற்கு முரளிதரன் எப்பவும் கட்டுப்பட்டவராவர். ஆனாலும் ஒரு தமிழராகப் பிறந்த காரணத்தால் விதி அவரின் வாழ்கையிலும் புகுந்து விளையாடுகின்றது. Man of the match விருது பெற்று உரையாற்றும் போது தான் இத்துடன் நின்று விடப்போவதில்லை. மீண்டும் உலக சாதனையை முறியடிக்க முயலுவேன் என்று சபதமிட்டார். இங்கிலாந்து நாட்டிற்கு எதிராக 9 விக்கெட்டுகளை எடுத்த முரளிதரன் இரண்டாவது தடவையாக 9 விக்கெட்டுகளை எடுத்த முதலாவது வீரர் ஆவர்.

சர்வதேச கிரிகெட் கமிட்டியின் அறிவிப்பின் படி துடுப்பாட்டத்தில் Batsman of the year விருதை அவுஸ்திரேலியர் ஆன Hayden இனும் Bowler of the year விருதை தமிழ் வீரன் முத்தையா முரளிதனும் 2001ஆம் ஆண்டிற்கான விருதை பெறுகின்றனர். 2000ஆம் ஆண்டு 75 விக்கெட்டுகளைச் சரித்து முதல் இடத்தைப் பெற்ற முரளிதரன். 2001ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக 12 ஆட்டங்களில் 80 விக்கெட்டுகளைச் சரித்து முதல் இடத்தைப் பெறுகின்றார். 1998ஆம் ஆண்டு Alan Donald இன் சாதனையும் 1981ஆம் ஆண்டு Dennis Lillie ஏற்படுத்திய சாதனையையும் முரளிதரன் முறியடித்து உள்ளான். 2001ஆம் ஆண்டுக்கான டெஸ்ட் விருதுகளில் முரளிதரன் முதலாம் இடத்தையும் இந்தியாவின் Harbaj Sing இரண்டாம் இடத்தையும் அவுஸ்திரேலியரான Shan Warne மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர். 2001ஆம் ஆண்டு அதிகுறைந்த ஆட்டங்களில் 12 ஆட்டங்களில் 80 விக்கெட்டுகளைப் பெற்றதன் மூலம் முரளிதரன் அதிகூடிய விக்கெட்டுகளை பெற்ற சாதனையான Richard Hadlee இன் சாதனையும் முறியடித்துள்ளார். 124 வருட கிரிகெட் சரித்திரத்தில் 9 விக்கெட்டுகளை 51 ஓட்டங்களைக் கொடுத்து பெற்றதன் மூலம் முரளிதரன் 5வது இடத்தைப் பெற்றுள்ளார். 29 வயதுடைய முரளிதரன் இதுவரை 391 விக்கெட்டுகளை டெஸ்ட் ஆட்டங்களில் பெற்றுள்ளார். இதன் மூலம் நியூசிலாந்து R. Hadlee, இங்கிலாந்து Ian Btham (383 விக்கெட்டுகள்) ஆகியோரை தாண்டி கிரிகெட் சரித்திரத்தில் 7வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். 400, 500 விக்கெட்டுகளை தாண்டி உலக சரித்திரத்தில் சரித்திரம் படைப்பது வெதூரத்தில் இல்லை என்பது கண்கூடு.

"வாழ்க தமிழ் வீரன் முரளிதரன்"
"வளர்க தமிழன் புகழ் தரணி எங்கும்"

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1930ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

–தொகுப்பு - பரம்

### 2001 சிறந்த சினிமா... சிறப்புகள்

தமிழ்ப்படங்களின் தயாரிப்பு விகிதம் பத்தாண்டுகளுக்கு முன்பிருந்தே குறையத் தொடங்கிவிட்டது. இப்போதெல்லாம் ஓர் ஆண்டுக்கு 70 படங்களை தாண்டினாலே போதும் என்கிற நிலையில் தமிழச் சினிமா உலகம் இருக்கிறது!

சுவாசிப்பதற்கே செயற்கைக் காற்று தேவைப்படுகிற நிலை இருந்தாலும் கோஷ்டிச் சண்டைகள் - குழிபறிப்புகளுக்கு மட்டும் இங்கு குறைவு இல்லை! முடிந்த தீபாவளி நாளில் வெளியான படங்களில் ஏற்பட்ட ப்பு மட்டும் நாற்பது கோடியைத் தாண்டும் என்கிறார்கள்.

இது மட்டுமல்ல. யாரோ பட்ட கடனுக்காக எவனோ ஒருவனின் படத்தை முடக்கிப் போடும் மூர்க்கத் தனமும் சினிமாவின் மென்னியை நெரித்துக் கொண்டிருக்கிறது.

இவைகளுக்கெல்லாம் தீர்வு காணவேண்டிய தொழில்ரீதியான அமைப்புகளிலும் சிலரின் 'ஒத்துழையாமை' போக்கு இடையூறாக இருந்து வருகிறது. குறிப்பாகச் சொல்வதென்றால் தயாரிப்பாளர்கள் சங்கம் தென்னிந்திய நடிகர் சங்கம் இரண்டும் ஒருமித்த கருத்துடன் செயல்பட்டால் தமிழ்ச் சினிமாவுக்கு மறுவாழ்வு கிடைக்கக் கூடும்!


இது எமது பிரார்த்தனை! இனி கடந்த ஆண்டின் சிறந்தவைகளைப் பார்க்கலாம். அதற்கு முன்பாக ஒரு சிறிய தகவல். 2000ஆம் ஆண்டில் வெளியான நேரடித் தமிழ்ப்படங்கள் 69. மொழிமாற்றுப் படங்கள் 96. 2001ஆம் ஆண்டில் அதாவது முடிந்த ஆண்டில் வெளியான நேரடித் தமிழ்ப்படங்கள் 75. மொழிமாற்றுப் படங்கள் 80.

இன்னொரு முக்கியத் தகவலும் உண்டு. தணிக்கை செய்யப்பட்ட இது நாள் வரை திரையைக் காணாத நேரடித் தமிழ்ப் படங்கள் 176. மொழிமாற்றுப் படங்கள் 177. ஆக மொத்தம் 353 படங்கள் மூலம் முடங்கிக் கிடக்கும் தொகை சுமாராக ரூ.75 கோடி! நின்று நிதானித்து வசனம் பேசி மூன்று மணி நேரத்தில் 30 பாடல்களுடன் படங்கள் வெளியான காலகட்டத்தில் புதிய பரிணாமமாக உதித்து வரலாறு திவிட்டு மறைந்தவர் டாக்டர் செவாலியே சிவாஜி கணேசன் அவர்கள்.



இவரின் இழப்பு நமக்கு ஈடு செய்ய முடியாத அவா பெருந்தலைவர் காமராஜரின் அன்புக்குரியவராக இருந்தவர் என்ற காரணத்தினால் அவருக்குரிய பல விருதுகளைச் சொந்தக் கட்சியில் எதிரணியாக செயல்பட்டவர்கள் தடுத்தனர். நாடறிந்த கதை இது. அந்த நடிப்புலக மேதையை நினைவு கூர்ந்து விட்டு சிறந்தவர்களை பாராட்டுவோமாக!

வெள்ளிவிழா கொண்டாடிய படங்கள் கடந்த ஆண்டில் இரண்டே இரண்டுதான். 'தெனாலி', 'பிரண்ஸ்'. 125 நாட்கள் ஓடிய படம் 'தீனா'. 100 நாட்கள் ஓடிய படங்கள் 12. பிரமாண்டம் என்று சாதனை செய்திருக்கும் படம் 'ஆளவந்தான்'.



சூர்யா:"புறாவை தூது அனுப்பி எல்லாம் காஷ்மீர்ல அமைதி வராது. வேற ஏதாவது ஐடியா சொல்லு."

நடிப்பில் தேர்ந்தவர்கள். தேர்வு எழுதிக் கொண்டு வரும் இளம் தலைமுறையினர். இந்த இரு தரப்பினரும் கடந்த ஆண்டு வணிகரீதியாக சில தயாரிப்பாளர்களுக்கு வாழ்வு கொடுத்திருக்கிறார்கள். சூப்பர் ஆக்ரர் கமல்ஹாசன் (தெனாலி). எழுச்சிக் கலைஞர் விஜயகாந்த் (வாஞ்சிநாதன்). சுப்ரீம் ஹீரோ சரத்குமார் (சமுத்திரம்). இளம் தலைமுறை நடிகர்களில் அல்டிமேட் ஸ்டார் அஜித் (தீனா). விக்டரி ஹீரோ விக்ரம் (தில்). யங்டர்க் விஜய் (பத்ரி) முக்கியமானவர்கள். ஆக பேராசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டு கடந்த ஆண்டு வெற்றிப் படங்களை தந்திருக்கிறார்கள்.

இதில் மாணவர்களுக்கு பேராசிரியர்களான கமல், விஜயகாந்த், சரத்குமார் ஆகியோர் மதிப் பெண்கள் கொடுக்க வேண்டியர்கள் என்பதால் மாணவர்களின் திறமையை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது!

முதலில் 'பிரண்ஸ்' பார்க்கலாம். விஜய் - சூர்யா இணைந்து நடித்திருக்கும் படம். வடிவேலு, ரமேஷ் கண்ணா குழுவினரின் நகைச்சுவைக் காட்சிகளும் காதுகளுக்கு இனிமையான பாடல்களும் படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தன. வடிவேலு - ரமேஷ்கண்ணா குழுவினர் மராமத்து வேலை செய்வதற்காக ஜமீன் வீட்டுக்குள் புகுந்ததுமே கதைக்கு தணிக்கைகள் வந்துவிடும். தன்னை மறந்து சிரிக்க வைக்கும் காட்சிகளால் பிரண்ஸ் வெள்ளிவிழாவை எட்டியது.

(தொடரும்)






# தூறல்

## படைப்பாளி, பார்வையாளன், தொழில்நுட்பம்

(சென்றவாரத் தொடர்ச்சி)


# ஞானம்ஸ் ஸ்ருடியோ



**Introducing 1 Hour Photo Lab:**
**3x5 & 8 x 12**
*Professional Photographer* - கதிர்
☎: 416 - 750 - 8118
2381 Eglinton Ave., E.
KENNEDY / EGLINTON, SCARBOROUGH


### Beautiful Shots

இது பொதுவாக இயக்குனர்கள் கூறிக் கொள்வது எதனை அடிப்படையாகக் கொண்டு கூறுகிறார்கள்?

1. நடிகை. நடிகர் சிறப்பாக நடித்திருந்தாரா?
2. பின்னணி நடிகர். நடிகைகள் சிறப்பாக செய்திருந்தனரா?

இன்று வரை விடை தெரியாத கேள்வியே இது. அது என்ன அழகான படப்பிடிப்பு? அப்படி ஒன்று இருக்க முடியாது என்பது Rosselini இன் கருத்து சினிமாவில் தொழில்நுட்பங்களை கூடுதலாக பயன்படுத்துவதை விட நல்ல திரைக்கதையை பயன்படுத்துவதே சாலச் சிறந்தது. தொழில்நுட்பம் ஒரு காட்சியை நிர்ணயிக்கக் கூடாது என்பது Rosselini இன் வாதம்.

### Camera



வீதியில் ஒரு Camera உடன் செல்கிறீர்கள். பலவற்றைப் படம்பிடிக்கலாம். அழகான பெண்ணை அழகிய கட்டிடம். மரம். செடி. கொடி. முதியவர்.. உங்களது விருப்பம். நோக்கம் எதுவோ அவையே உங்களது Camera இல் படிகின்றன. இதே வீதி. நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. மூன்றாம் உலக நாடுகளின் வீதி வறுமையின் வெளிப்பாடாகவும் முதலாம் உலக நாடுகளின் வீதி செல்வத்தின் பிறப்பிடமாகக் காணலாம். இந்த Camera ஐ உபயோகிக்கும் தொழில்நுட்பவியலாளனுக்கும் படைப்புக்குமிடையே நேரடித் தொடர்புண்டு. ஒளியின் அளவு. காட்சியின் பரிமாணம் போன்றவற்றை தீர்மானிப்பவன் இவனே. இவனும் தனது பார்வைகளை படைப்பின் மேல் செலுத்த வேண்டும் என்பது மற்றொரு கருத்து.

நவயதார்த்தவாதம் என்பது ஒரு கவிதை. மனித வாழ்வின் கவிதை என்கிறார் Zavattini. நவயதார்த்தவாத கோட்பாடின் தந்தையான Umberto கூறுகிறார். 'கற்பனை ஒழிக்கப்பட வேண்டும். இது பிரச்சினையின் பின்னனியை அதன் ஆழத்தை அழிக்கிறது'.

**பதேர் பாஞ்சாலி**

இத்தாலிக்கு வெளியே எடுக்கப்பட்ட நவயதார்த்தவாத திரைப்படங்களில் குறிப்பிடத்தக்க ஒன்று "பதேர் பாஞ்சாலி". பிரபல இந்திய இயக்குனர் சத்யஜித்ரே இயக்கியிருந்தார். இத் திரைப் படத்தில் உள்ள பல அம்சங்களை சுருக்கமாக நவயதார்த்தவாத சினிமாவிற்கு ஒப்பிடலாம்.

1. குறைந்த செலவு = தயாரிப்பு
2. புதிய நடிகர்கள் (தொழில் ரீதியான நடிகர்கள் அல்ல)
3. 90% ஆன படப்பிடிப்பு studio இற்கு வெளியில் வெளிப்புறங்களில்
4. படைப்புடன் கூடிய விமர்சனம்

நவயதார்த்தவாத கோட்பாடின் அடிப்படையில் வெளியான இரு திரைப் படங்களின் கதைச் சுருக்கங்கள்

**1. Roberto Rosselin இன் "Open City"**

ஜேர்மன் படைகள் ரோமுக்குள் செல்கின்றன. சித்திரவதைகள். கைதுகள் தொடர்கின்றன. சிலர் எதிர்க்கிறார்கள். சிலர் ஒதுங்கிறார்கள். இரு துருவங்களைச் சேர்ந்தோர் ஒரு இடது சாரியும் ஒரு பாதிரியாரும் கை கோர்க்கின்றனர். அநியாயத்தை எதிர்க்க இருவரும் வலியுறுத்துவது ஒன்றே 'எமக்கு சுதந்திரம் வேண்டும்'.

**2. Vittorio DeSica இன் "Bicycle Thief"**

வேலையில்லாது அல்லல் படும் ஒருவன். வேலை பெறுவதற்கு சைக்கிள் அவசியம். ஆனால் அவனது சைக்கிளோ வட்டிக் கடையில். திருமண நகைகளை விற்று சைக்கிளை மீட்கிறான். வேலை கிடைக்கிறது. முதல் நாளே சைக்கிள் களவு போய் விடுகிறது. சைக்கிள் கள்ளனே ஒரு காக்கா வலிப்புக் காரன். அவன் மேல் ஏற்பட்ட பரிதாபத்தால். வேறொரு சைக்கிளை திருடுவது என முடிவு செய்கிறான். திருடும் போது பிடிபட்டு அடி உதை வாங்குகிறான். அவனது கதையைக் கேட்ட கூட்டம் மன்னித்து விடுகிறது.

**நவயதார்த்தவாத சினிமா - மதிப்பீடு**

ஒரு புறம் கத்தோலிக்க மதத்துக்கு ஈடான கோட்பாடு என்ற கருத்துண்டு. மறுபுறம் இடது சாரி அதாவது மார்க்ஸிய கருத்துக்கான கோட்பாடு என்ற கருத்தும் உண்டு.

சினிமா என்பது ஓர் அழகான கலை. அழகை வெளிப்படுத்த வேண்டும். சுகமாக. சந்தோஷமாக இரசிக்கப்பட வேண்டும். அதை விடுத்து விமர்சனம் தேவையில்லை என்பது Hollywood ஐச் சேர்ந்த விமர்சகரது கருத்து.

<u>விடுகதை.</u>

1) கல்லைக் காத்தாரு கோவையால் வளர்ந்தான் அவன் யார்? புலிகேசி
2) எழுதியில்லாதவன் விருந்தில் இருந்தாரு உத்தரவு போருதில் கொடுக்கரன் அவன் யார்? நக்கீ
3) சண்டை போடுக் கொல்லாதவன் சண்டையை காற்றுவான் அவன் யார்? பாரி

படைப்பினுள்ளே படைப்பாளி புகுந்து. பார்வையாளனை மாற்ற முற்படுகின்றான். விமர்சனம் என்ற பெயரில் படைப்பாளி தனது கருத்துக்களையே முன் வைக்கிறான். இது ஒரு இயக்கம். முழு உலகையும் மாற்ற முற்படுகிறது. இடது சாரிகளது கருத்துக்கள் திணிக்கப்படுகின்றன. பார்வையாளன் நிஜத்தைத் தரிசிக்காமல். சுகமற்ற புறத்தையே காண்கிறான். கத்தோலிக்கமும் மார்க்சிசமும் ஒன்று என்ற கருத்தை முன் வைக்க முயற்சிக்கிறார்கள். இது ஒரு வகைக் கருத்துத் திணிப்பு.

ஒரு திரைப்படத்தில் பல தொழில் நுட்பவியலாளர்கள். இது கூட்டு முயற்சி. பொதுவாக இவ் வகைத் திரைப்படங்களில் இயக்குனரின் கருத்தே வெளிப்படுகின்றன. அப்படியாயின் ஒளிப்பதிவாளனுக்கு உள்ள சுதந்திரம் என்ன? ஒளியைக் கூட்டிக் குறைப்பதால் நடிகனுக்கு உள்ள சுதந்திரம் என்ன? ஒரு படைப்பில் இவர்களுக்கிடையே உள்ள தொடர்பு என்ன? இவர்கள் உதிரிகளா? அல்லது இவர்கள் இயங்கிகளா?

படைப்புக்கும் பார்வையாளனுக்கும் படைப்பாளிக்கும் படைப்பின் பின்னணியில் இயங்குபவர்களுக்கும் இடையில் உள்ள இடைவெளி மிக மிகக் குறைவாகவே இருக்க வேண்டும் என்பது நவயதார்த்தாவாதிகளின் கருத்து. ஆனால் இது சாத்தியமா? பொதுவாகத் திரைப்படங்கள் இயக்குனரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே படைக்கப்படுகின்ற கட்டுப்பாட்டுக்குள் இயங்குகின்றன.

Rosselini இன் குற்றச் சாட்டு ஒளிப்பதிவாளர்களின் வேலையை Studio இல் உள்ள தொழில்நுட்பம் குறைத்துவிடுகிறது. கற்பனை, திறமையற்ற ஒளிப்பதிவாளன் தொழில் நுட்பத்தால் குறிப்பாக ஒளி விளக்குகளால் காட்சியமைத்து பாராட்டுக்களைப் பெறுகிறான் என்பது அவரது கருத்து. சினிமா விஞ்ஞான வளர்ச்சியில் தோன்றிய கலை. தொழில்நுட்பம் வளர்ச்சியை சாதகமாக பயன்படுத்தி பார்வையாளனுக்கு சிறப்பாக காட்சிகளை படைப்பது திறமையுள்ள படைப்பாளனின் பங்கு. அப்படியில்லாவிடின் விஞ்ஞான வளர்ச்சி ஏன்? இத்தாலியில் இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட மோசமான நிலைமைகளின் போது பாதிரிமார்கள் சிறப்பாக பங்காற்றியுள்ளார்கள். இதனால் இவர்களது சமுகப் பங்களிப்பு அதிகரித்துள்ளது. இது இத்தாலியில் மட்டுமல்ல. இன்று இலத்தீன் அமெரிக்க நாடுகள் போன்ற பல நாடுகளிலும் இவர்கள் இவ்வாறே செயலாற்றியுள்ளார்கள். கன்னியாஸ்திரிகள் தாதிகளாக கடமையாற்றியுள்ளார்கள். இலங்கையிலிருந்து கூட பல பாதிரிமார்கள் சிறப்பாக போரின் போது பங்காற்றியுள்ளார்கள். பங்காற்றி வருகிறார்கள்.

Rome Open City போன்று Romaneo என்னும் Elsalvador பிரச்சினை பற்றிய படத்திலும் பாதிரிமார்கள் போராளிகளுடன் இணைந்து செயற்படுவதாகக் காட்டப்படுகிறது. ஆரம்பகால நவயதார்த்தவாத இயக்குனர்கள் கத்தோலிக்க மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்கள். இடது சாரிகளது கருத்துக்களையும் மதத்தையும் ஒரே தட்டில் வைத்துப் பார்த்துள்ளார்கள். Fame Agee என்னும் அமெரிக்க விமர்சகர் 1946ஆம் ஆண்டு Open City ஐப் பார்த்த பின்னர் எழுதிய விமர்சனத்தில் ஆச்சரியமாகவுள்ளது. இரு துருவங்கள் ஒரு விடயத்தில் ஒன்றாக இணைகிறார்கள் எனக் காட்டுவது. மக்கள் இதனை எவ்வாறு ஏற்றுக் கொண்டார்கள்? சில சமயம் இரண்டுக்குமான அடிப்படை ஒன்றாக இருக்கலாம். சில வருடங்களின் பின்னர் "Europen" என்ற Rossellini இன் படத்தின் பின்னர் Rossellini கூறினார், "மதம் மனிதனை வரையறுக்கும். ஆனால் புரட்சியை உண்டு பண்ணாது என்றார்". இதன் பின்னர் வந்த முக்கிய மூன்று இயக்குனர்கள் Carlo Lizzani, Federico Fellini, Michelmagelo Antonioni ஆகியோர் மதத்தையும் மார்க்சிசத்தையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கவில்லை.

நவயதார்த்தவாத சினிமாக்கள் இத்தாலியில் தொடங்கி இந்தியா வரை பல நல்ல திரைப்படங்கள் வெளிவரக் காரணமாகியது. 1950இல் இலண்டன் சென்ற சத்யஜித்ரே சுமார் 95 படங்களை பார்வையிட்டார். அவரை பாதித்த படங்களில் ஒன்று 'Bicycle Thieves', 'பதேர் பாஞ்சாலி' வெளிவரக் காரணமாகியது. இப்படம் அதே போன்று 'Rashomon 'என்ற படத்துக்கு Venice Film Festival இல் விருது வழங்கப்பட்ட போது Akira kurasa கூறியது, "எனக்கு பாதிப்பை வழங்கியது 'Bicycle Thieves' என்ற படமே".

சைக்கிள் களவு போவது என்ற ஒரு சாதாரண விடயம். அதற்கு ஒரு படமா? இல்லை அவனது வாழ்க்கை வட்டமே அழிந்துவிட்டது. ஆனால் அத்திரைப்படம் பல புதிய இயக்குனர்கள் உருவாகக் காரணமாகியுள்ளது. இன்றும் நவயதார்த்தவாத சினிமாக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. நல்ல சினிமாக்கள் வெளிவர 1940 களில் அடி நாட்டப்பட்டது. இன்று வரை சில அடிகளே வளர்ந்துள்ளன.

-வானரன்-

# விண்வெளி

- தருபவர் - கனி

அந்நியர்கள்:- 75



**வணக்கம்!** விடுமுறை நாட்கள் முடிவடைந்து வழமையான ...ரப்பான நாட்களுள் உற்சாகமாகப் புகுந்திருப்பீர்கள். புதுப்புது நல்ல ...டங்களைச் செயற்படுத்தி முடிக்கும் நல்ல வருடமாக இவ்வருடம் அமையட்டும். மன மகிழ்ச்சியும் நிறைவும் உற்சாகமும் உள்ள வருடமாக அமையட்டும் இப் புதுவருடம் என மீண்டும் வாழ்த்தி சென்ற வருடத்தில் முடிவடைய மறுத்த "அந்நியர்" களை விட்ட இடத்தில் இருந்து தொடருவோம்!

மீண்டும் ஒரு முறை யார் இந்த அந்நியர்கள் - "Aliens" எனப் பார்ப்போம். மதங்களின் கூற்றுப் படியோ அல்லது விஞ்ஞானிகளின் அனுமானங்களின் படியோ ஆயினும் சரி இப் பூமியில் பல்நெடுங்காலமாக மனித இனம் உள்ளது. அத்துடன் இப்பூமியின் சகல உயிரினங்களினும் பார்க்க ஒருபடி உயர்வாக அறிவியல் நிலையில் மனித இனம் உள்ளது. அதன் அடிப்படையில் உலகின் சகல உயிரினங்களையும் ஆளும் அல்லது மேவும் வல்லமையை மனிதன் கொண்டுள்ளான். எனவே பூமியின் சொந்தக்காரர்கள் மனிதர்கள் எனச் சொல்வதில் தவறு ஒன்றுமில்லை எனலாம். இந்த மனிதர்கள், பூமியின் உயிரினங்கள் தவிர்ந்த உயிரினம் ஒன்று இருப்பின் அது பூமியைப் பொறுத்த மட்டில் அந்நியர் - ஏலியன் ஆகின்றது.

இனி ஏலியன் என ஒன்று இருக்க முடியுமா என்ற விடயம் பற்றி ஞாபகப்படுத்திப் பார்ப்போம்! சமயங்களின் அடிப்படையில் பார்த்தால் இப் பூமியில் மனிதரை இறைவன் படைத்தான் என்றாகிறது. மற்றும் உயிரினங்களையும் இப் பூமியில் இறைவன் தான் படைத்தான் எனவும் சமயங்கள் கூறுகின்றன. இதன் அடிப்படையான உயிரினங்கள் இப் பூமியில் மட்டும் தான் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை எம்முள் உ...ள்ளது. ஆனால் இறைவன் பிரபஞ்சத்தின் வேறு இடங்களில் கூட ...ரினங்களை படைத்திருக்கலாம். இது பற்றிய தார்ப்பரியங்கள் எதுவும் எமக்கு சமயங்கள் வாயிலாகத் தெரியாது. ஆயினும் மோட்சம், நரகம் - தேவர்கள் - சாத்தான்கள் என்ற பூமி சார்பில்லாத சில விடயங்கிளைச் சமயங்கள் கூறுகின்றன. இந்தத் தேவர்கள், சாத்தான்கள் இருப்பின் அவர்கள் கூட மனித இனத்தைப் பொறுத்த வரையில் வல்லமை பொருந்திய அந்நியர்கள் ஏலியன்கள் தான். ஏன் நம்மைப் படைத்து நம்மை எல்லாம் இப் பூமியின் சொந்தக்காரர்கள் ஆக்கி பிரபஞ்சத்தின் எங்கேயோ அல்லது பிரபஞ்சம் முழுவதும் பரந்து வியாபித்து இருக்கும் இறைவன் கூட ஏதோ ஒரு வகையில் இந்த அந்நியர்கள் - ஏலியன்கள் வரிசையில் தான் வருகின்றார்.

இனி விஞ்ஞான ரீதியாகப் பார்த்தால், சேதனப் பதார்த்தங்களின் இயற்கை சக்தியில் பல்வேறு வேதியல் மாற்றங்களின் பலனாக, பல மில்லியன் ஆண்டுகளின் பின் பூமியில் உயிரினங்கள் தோன்றியுள்ளன. மேலும் பல மாற்றங்களினாலும் பரிணாமா வளர்ச்சியின் ஊடாகவும் பல்லாயிரம் ஆண்டுகளில் பூமியின் சகல உயிரினங்களும் புத்தி ஜீவிகளாகிய மனித இனமும் தோன்றின. இப் பிரபஞ்சத்தில் பல மில்லியன், மில்லியன் கோள்கள் உள்ளன. இக்கோள்களில் சில வற்றிலும் கூட உயிரினங்கள் இயற்கையின் வேதியல் தாக்கத்தின் பலனாகத் தோன்றி, சூழலுக்கேற்ப பரிணாமமடைந்து மனித இனத்தைப் போன்றோ அல்லது அதனிலும் அறிவியல் நிலையில் கூடியோ அல்லது குறைந்தோ இருக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. அப்படியாக உயிரினம் ஒன்று இருப்பின் அது சரியாக அச்சொட்டாக மனிதனைப் போலத்தான் இருக்க வேண்டும் என்றில்லை. சில உருவ வித்தயாசத்திலோ அல்லது முற்றாகவே வேறு உருவத்திலோ இருக்கலாம். அப்படியாக இப் பிரபஞ்சத்தில் உயிரினங்கள் இருக்குமாயின் அவை எல்லாம் எமக்கு அந்நியர்கள் - ஏலியன்களே.

எனவே சமயங்களின் படியாயினும் சரி விஞ்ஞான அறிவியலின் வழியே ஆயினும் ஏலியன்கள் இருப்பது அல்லது இருக்கக் கூடிய நிலையானது சாத்தியம் என்றாகிறது. ஏலியன்கள் இருக்கலாம் என்ற எண்ணம் பெரும்பாலும் விஞ்ஞானிகளிடையே காணப்படுகின்றது. அதன் விளைவாக அந்த ஏலியன்களைத் தேடும் முயற்சியிலும் அவர்கள் துரிதமாக ஈடுபடத் தொடங்கி விட்டனர். அவை பற்றி இனிப் பார்ப்போம்.

* * * * * *


**Safety Truck**

**TRAINING SCHOOL LTD.**

*Training & Trucking Classes A, D & Z*

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம் (8ஆம் ஆண்டு) வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்

**We Accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
(One On One Training)
அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

*In Classes*

- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**

**Truck Driving** போதனாசிரியர்

(15 Years Canadian Experience with Trucks)

☎: (905) 793-9546 / (416) 616-5979

**250 Summerlea Road, Brampton, On.**



**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**

உங்களுக்கு தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிடஉரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்

- CRIMINAL
- DOG BITES
- SLIP & FALL
- ACCIDENT INJURIES

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்

பின் இவரை அழையுங்கள்



416 490-9199

S.K.THEESAN
எஸ்.கே.தீசன்

அன்று இணுவிலில் கலகலப்பு
இன்று இன்ரநெற்றில் கலகலப்பு

www.kalakalappu.net

கலகலப்பு தீசன் **416-490-9199**

# அன்புத் தமிழ்



- கவிஞர் வி. கந்தவனம்

**அமெரிக்க அரிசோனா மாநிலத்தின் Benson நகரில் அமைந்துள்ள உலக பல்கலைக்கழகப் பேராளர்கள் சபை (W.U.R.) கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் தமிழ் இலக்கியத் துறையில் அவரது பங்களிப்புக்களை ஆராய்ந்து கலாநிதிப் பட்டமளித்துக் கௌரவித்துள்ளது.**

வி. கந்தவனம் அவர்களிற்கு 'விளம்பரம்' தனது வாழ்த்தினைத் தெரிவிக்கின்றது.

*****

## *மணக்க வருகின்றான் தலைவன்!*

காதலர்கள் எப்பொழுதும் ஒன்றாகவே இருக்க விரும்புவர். அதுவே காதலுக்குச் சிறப்புமாகும். ஒன்றாக இருத்தல் என்பது முறையாகத் திருமணத்தை முடித்துக் கொண்டு குடும்பம் நடத்துதல்.

அவள் அவனைக் காதலிக்கத் தொடங்கி நாட்கள் பலவாகிவிட்டன. அந்த ஊரிலேயே அவனைப் போன்ற ஆண் அழகன் எவரும் இல்லை. அதனால் அவன் அழகிலே அவள் மயங்கியது வியப்பு ஒன்றும் இல்லை. அவனும் அவள் அழகைப் பலவாறு புகழ்ந்து பேசினான்.

ஆரம்பத்திலே பெற்றோருக்குத் தெரியாமல் அவனைச் சந்திப்பதும் பேசுவதும் எல்லாம் பெரும் கிளுகிளுப்பை அவளுக்கு ஊட்டின. ஒவ்வொரு சந்திப்பும் இன்பகரமான புதுப்புது அனுபவங்களைத் தந்தன.

காதல் வளர வளர அந்த அனுபவங்கள் சொந்தமாக வேண்டும் என்னும் எண்ணமும் வளர்ந்தது.

எத்தனை நாட்கள் சந்தித்தாலும் எவ்விதமாகப் பேசி மகிழ்ந்தாலும் சந்திப்பின் முடிவு பிரிவைத் தானே தருகின்றது! அந்தப் பிரிவு நீ அங்கே. நான் இங்கே என்னும் உணர்வையே அவளுக்கு அளித்தது!

இனி அடுத்த சந்திப்பு எப்பொழுது நிகழும் என்னும் ஏக்கத்தில் எத்தனை நாட்கள் தான் வாழ்வது?

அதுமட்டுமல்ல. இவர்களின் இரகசிய உறவு பற்றி ஊர்மக்கள் சிலரும் அறிந்து விட்டார்கள். அவர்கள் அப்படி இப்படி என்று கதைகளைக் கட்டிக் காற்றில் விடுவார்களேயானால் அவர்களது காதல் மாசுபட்டுவிடும். அது பெற்றவர்களுக்கும் கவலையைக் கொடுக்கும்.

ஊரவர் அலர் தூற்றமுன் தலைவன் தன்னை மணந்துகொள்ள வேண்டும் என்று அவள் நினைத்தாள்.

அதற்கு ஒரே வழி அவனைக் காணாமல் வீட்டிலே இருத்தல்.

அவள் திட்டம் பலித்துவிட்டது. அவளைக் காணாமல் அவனால் இருக்க முடியவில்லை. தான் விரைந்து வந்த தலைவியை மணந்து கொள்வதாகத் தோழியிடம் உறுதி கூறினான் அவன்.

அந்த நல்ல செய்தியை ஓடோடி வந்து தலைவிக்கு இவ்விதம் தெரிவிக்கின்றாள் தோழி: "மாரி காலத்திலே மலரும் பித்திகப் பூ கொய்வதற்கு அரிதானது. அதன் அரும்பு எழுச்சி பெற்ற மணம் நிறைந்தது. அத்தகைய அரும்பினது சிவந்த பின்புறத்தைப் போன்ற வளவிய செவ்வரி பரந்த குளிர்ந்த கண்களையும் தளிரை ஒத்த மேனியையும் அழகிய மா நிறத்தைம் உடைய என் தோழியே!

'நாடு மழையின்றி வறட்சி கொள்ள. கலப்பைகள் உழவின்றித் தூங்க. பசுமை கெட்டுப்போன நீண்ட கோடை காலத்திலே குன்றுகளைப் போன்ற கரைகளையுடைய அகன்ற குளங்கள் வெப்பம் மிகுதியால் வரண்டு கிடந்தன. நீர் இல்லாமையால் பறவைகளும் சென்று அங்கு தங்குவதில்லை.

'அத்தகைய குளங்கள் எல்லாம் நிறையும் வண்ணம் மழை பொழிந்தது. அந்தப் பெரும் மழை பொழிந்த இன்பம் நிறைந்த விடியற் காலத்திலே. பலபேரும் மகிழ்ந்த மகிழ்ச்சி எல்லாம் ஒன்றாக எனக்குள்ளே பெய்து வைத்தாற் போல இருக்கின்றது.


'ஏன் தெரியுமா?



EASY HOME BUY
வீடு விற்க வாங்க மற்றும் MORTGAGE வசதிகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்.
Thinking of Buying A Home or Selling Your Home and All Kind of Insurance!
With a small down payment, you could own your dream home.

FOR ALL YOUR HOUSING NEEDS CALL
Kiruba Kirushan
Service with a Broad Smile
416-414-5562

YARLCAN
STEAM CLEANING
CARPET CLEANING
DUCT CLEANING



உங்கள் சகலவிதமான தேவைகளுக்கும் அழையுங்கள்
மோகன் ☎: (905) 887-7436 Cel: 416 721-9709

ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் ரேடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.
முருகதாஸ் - ☎ 416-261-6883


*நாடு வறம் கூற. நாஞ்சில துஞ்சக்*
*கோடை நீடிய பைது அறு காலைக்*
*குன்று கண்டன்ன கோட்ட யாவையும்*
*சென்று சேக்கல்லாப் புள்ள. உள் இல்*
*என்றூழ் வியன் குளம் நிறைய வீசிப்*
*பெரும் பெயல் பொழிந்த ஏம வைகறை.*
*பல்லோர் உவந்த உவகை எல்லாம்*
*என்னுள் பெய்தந் தற்றே - சேண் இடை*
*ஓங்கித் தோன்றும் உயர்வரை*
*வான்தோய் வெற்பன் வந்த மாறே!*

அகநானூறு 42.

பித்திகம் - பிச்சி மலர்
நாஞ்சில் - கலப்பை
மலிபெயல் - மிகுதியான மழை
கொயல் அரு - கொய்தற்கு அரிதான
ஏர் மணம் - எழுச்சி மிக்க வாசனை
மா அ யோயே - மாமை நிறத்தை உடையவளே
செவ்வெரிந் கொழுங் கடை - சிவந்த கொழுந்து போன்ற பின் புறம்
கலித்த - தழைத்த
சேக்கல் - தங்கல்
முகை - அரும்பு
வந்த மாறு - மணம் புரிய வந்தபடி

உனது குளிர்ந்த கண்ணும் தளிர் மேனியும் வேறுபட்டு விடாதவாறு தலைவர் விரைவாக உன்னை மணக்க வருகின்றார் என்பது இப் பாடலின் சுருக்கம்.

தலைவன் விரைவாக வருவேன் என்று சொன்னதை. தோழி வந்தனன் என்று இறந்த காலமாக்கிச் சொன்னது மகிழ்ச்சியாலும் உறுதிப்பாட்டாலுமெனக் கொள்ளுதல் வேண்டும்.

# நான்கு வயது தமிழ்ச் சிறுவனின் சாதனை!

*Guiness Book இல் திருவரன் சபாரத்தினத்தின் பெயர்!*



ஜனவரி 12, 2002 சனிக்கிழமை மாலை 5:00 மணிக்கு Scarborough இல் அமைந்துள்ள Delta Hotel இல் இந்நிகழ்வு நடைபெற்றது. நான்கு வயது தமிழ்ச் சிறுவன் திருவரன் சபாரத்தினம், கனேடியப் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி நிலையங்களின் பிரதிநிதிகள் (CTV, CITY TV, ETC), தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மற்றும் தமிழ் வானொலி, தொலைக்காட்சி நிலையப் பிரதிநிதிகள் முன்னிலையில் தனது பெயரை Guiness Book இல் இடம்பெறச் செய்தான்.

